## இலங்கையில் முதற்தடவையாக இணையத்தின் மூலமாக கொள்வனவு வசதிக்காக Airtel மற்றும் Google ஆகியன கைகோர்த்துள்ளன

**கொழும்பு, இலங்கை, ஒக்டோபர் 25, 2017** - இலங்கையில் முதற்தடவையாக வாடிக்கையாளர்கள் Google Play இன் துணையுடன் தமது மீள்நிரப்பல்கள் மூலமாக (recharge அல்லது reload) apps மற்றும் ஏனைய டிஜிட்டல் உள்ளடக்கங்களை கொள்வனவு செய்யும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. AirPay என்ற பெயரிலான இந்த Direct Carrier Billing சேவையின் மூலமாக முற்கொடுப்பனவுத்திட்ட வாடிக்கையாளர்கள் தமது மீதமுள்ள தொகையில் கொள்வனவுத் தொகைகளை கழித்துக் கொள்ள முடிவதுடன், பிற்கொடுப்பனவுத்திட்ட வாடிக்கையாளர்கள் மேற்கொள்ளும் கொள்வனவுகள் அவர்களுடைய மாதாந்த தொலைபேசிக் கட்டணப் பட்டியலில் சேர்க்கப்படும்.

இலங்கையில் குறிப்பாக இளைஞர், யுவதிகள் மத்தியில் கடனட்டைகளின் புழக்கம் ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்தில் உள்ளமையைக் கருதுகையில், Google Play உடன் Airtel சமீபத்தில் ஏற்படுத்திக் கொண்டுள்ள இந்த கூட்டிணைப்பு, தற்சமயம் கடனட்டை அல்லது டெபிட் அட்டையைக் கொண்டிராதவர்களுக்கு இணையத்தின் மூலமாக கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு ஒரு மகத்தான மாற்றுவழியாக அமைந்துள்ளது. 40% அதிக வேகம் கொண்ட Airtel இணையம் மற்றும் Google Play இன் பாதுகாப்பு ஆகிய பயன்களின் துணையுடன் தமது ஸ்மார்ட்போன்களின் மூலமாகவே டிஜிட்டல் உள்ளடக்கங்களை கொள்வனவு செய்யும் வாய்ப்பு முதன்முதலாக Airtel வாடிக்கையாளர்களுக்கு கிட்டியுள்ளது. எயார்டெல் வாடிக்கையாளர்கள் தற்போது புதிய திரைப்படங்கள், இசை, கல்வி உள்ளடக்கம் மற்றும் விளையாட்டுக்கள் அடங்கலாக Google Play store இல் கட்டணம் செலுத்தி பெறப்படும் பல மில்லியன் கணக்கான apps பயன்பாடுகளை அடைந்துகொள்ள முடியும்.

“பெருந்தொகையான மக்கள் இணையத்தை உபயோகிப்பினும், சொந்தமாக கடனட்டையைக் கொண்டிராமை காரணமாக இணையத்தின் மூலமான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். இந்த கூட்டிணைவானது எமது வாடிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட தேவையை சௌகரியத்துடனும், பாதுகாப்பான வழியிலும் மேற்கொள்ள இடமளித்துள்ளது. டிஜிட்டல் வழிமுறை விற்பனையாளர்கள் மற்றும் app stores ஆகியோர் நேரடியாகவே மொபைல் சேவை வழங்குனரை எட்டும் வகையில் இது பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு உயர் மட்ட கொடுப்பனவுத் தீர்வாகும்,” என்று **Bharti Airtel Lanka நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஜினேஷ் ஹெக்டே** அவர்கள் கூறினார்.

வாடிக்கையாளர்கள் தமது android தொலைபேசி சாதனங்களின் மூலமாக தமது Google Play கணக்கு விபரப்பட்டியலில் கொடுப்பனவு வழிமுறைகளின் கீழ் ‘Use Airtel Billing’ என்ற கட்டளையை சேர்த்துக்கொள்வதன் மூலமாக Airpay இனை மிகவும் இலகுவாக செயற்படுத்திக் கொள்ள முடியும். செயற்படுத்தல் நடவடிக்கை பூர்த்தியாகிய பின்னர் தங்களுக்கு விருப்பான உள்ளடக்கத்தின் மீது ‘Buy’ என்பதை இலகுவாக கிளிக் செய்து, ‘Bill my Airtel account’ என்பதைத் தெரிவு செய்து, கொள்வனவை உறுதிப்படுத்துவதற்காக தங்களுடைய Google கணக்கின் கடவுச்சொல்லை வழங்கவேண்டும்.

வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்தி, தவறுதலாக மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுகளை தவிர்ப்பதற்காக தொகை மீளளிப்பு தெரிவையும் இச்சேவை கொண்டுள்ளதுடன், கொள்வனவு செய்யப்பட்ட app இல் அது தோற்றமளிப்பதுடன், இரு மணித்தியாலங்கள் வரை அது தொடர்ந்திருக்கும். பயனர்கள் தமது Google Play கணக்கு விபரப்பட்டியலில் ‘Order History’ இன் மூலமாக தங்களுடைய Airpay கொள்வனவு நடவடிக்கைகளின் விபரங்களை முழுமையாக கண்டறிந்துகொள்ள முடியும்.

இன்னும் அதிக எண்ணிக்கையான பங்காளர்கள் இணைந்து கொள்ளவுள்ள நிலையில் Airtel வாடிக்கையாளர்கள் இலகுவாக கிளிக் செய்வதன் மூலமாக முற்பதிவுகள், நியமனங்கள் மற்றும் ஏனைய சேவைகளை மொபைல் சேவை வலையமைப்பின் மூலமான கொடுப்பனவுத் தெரிவுகளின் உதவியுடன் மேற்கொண்டு இலத்திரனியல் வர்த்தக சேவைகளின் (e-commerce) எண்ணிக்கை அதிகரித்துக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டவுள்ளது.

**— முற்றும் —**

**Bharti Airtel Lanka (Pvt) Ltd நிறுவனம் தொடர்பான விபரங்கள்**

சர்வதேசரீதியாக 17 நாடுகளில் தொழிற்பாடுகளுடன், 3 ஆவது பாரிய தொலைதொடர்பாடல் வலையமைப்பு சேவை நிறுவனத்தின் ஒரு உறுப்பு நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்ற Bharti Airtel Lanka, 2009 ஆம் ஆண்டில் இலங்கையில் தனது சேவைகளை வழங்கும் முகமாக வர்த்தகரீதியான தொழிற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. இத்துறையில் மிக விரைவாக ஒரு மில்லியன் வாடிக்கையாளர்களை சம்பாதித்த பெருமை எயார்டெல் நிறுவனத்தையே சாரும். Airtel நிறுவனத்துடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினரையும் மதிக்கும் வகையில் செயற்பட்டு, அவர்களின் வாழ்வை வளப்படுத்தி, தாங்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்ற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்த நாம் விரும்புவதால் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் எயார்டெல் நிறுவனத்தின் வர்த்தக சமூக பொறுப்புணர்வுக் கொள்கை அமைந்துள்ளதுடன், பங்காளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் இளைஞர்,யுவதிகள் என ஒட்டுமொத்த வழங்கல் சங்கிலியின் மத்தியிலும் சமூகத்தின் மீதான தனது அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டை எயார்டெல் பேணி வருகின்றது. இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட Airtel Lanka, குரல் (voice), தரவு (data) மற்றும் நிறுவனத் தீர்வுகள் அடங்கலாக டிஜிட்டல் மொபைல் சேவைகளை வழங்கி வருகின்றது. மேலதிக விபரங்களுக்கு: www.airtel.lk.

**ஊடகத் தொடர்புகளுக்கு**
ஃபியோனா நாணயக்கார - 0755841523